Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 44 of 2020**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.11**
Defence
Court

| | |
|---|---|
| Name | பிரசாத் |
| Father's name | சுப்ரமணியன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | கிராம நிர்வாக அலுவலர் |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 5th day of September 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 5th day of September 2023.**

SIGNATURE OF THE JUDGE.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பண்ருட்டி தாலுக்கா, ஒறையூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை

மேல்பாதி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 01.01.2020 ஆம் தேதி மாலை சுமார் 03.30 மணி அளவில் நெல்லிக்குப்பம் காவல்நிலையத்திலிருந்து என்னை நெல்லிக்குப்பம் பஸ் நிலையத்திற்கு வரச்சொல்லி போன் வந்தது. நானும் எனது கிராம உதவியாளர் முஜிபுர் ரஹ்மானும் நெல்லிக்குப்பம் பேருந்து நிலையம் சென்றோம். அங்கு போலிசாரும், கொலை வழக்கில் தொடர்பான எதிரி ஒருவர் இருந்தார். அவரின் பெயர் சுமன்ராஜ் என்றும், அவர் மேல்பாதியை சேர்ந்தவர் என்பதும் எனக்கு போலிசார் மூலமாகவும், அந்த எதிரி மூலமாகவும் தெரிய வந்தது. அந்த எதிரி சுமன்ராஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் முதல் நபர் எதிரி சுமன்ராஜ். நாங்கள் அங்கு சென்றவுடன் எதிரி சுமன்ராஜ், நான் தான் எல்லாம் செய்தேன் என்று சொல்லி ஒரு வாக்குமூலம் கொடுத்தார். எதிரி சுமன்ராஜ், அவராகவே முன்வந்து தான், சுயமாக அந்த வாக்குமூலத்தை வழங்கினார். அந்த வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் போலிசார் பதிவு செய்துகொண்டார்கள். **எதிரி சுமன்ராஜின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் அதசாஆ 2 ஆகும்**. எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்றால், பஸ் ஸ்டாண்டில் வைத்து கையெழுத்து போட்டேன். அங்கேயே ஒப்புதல் வாக்குமூலம் தயாரித்தார்கள். பின்னர் எதிரி சுமன்ராஜ் தான் உபயோகப்படுத்திய பொருட்களை காண்பிப்பதாக போலிசாரிடம் கூறினார்.

2. அதன்பிறகு முதல் எதிரி சுமன்ராஜை அழைத்துக்கொண்டு போலிசார் எதிரி சுமன்ராஜ் குறிப்பிட்ட மேல்பாதி கிராமத்திற்கு சென்றார்கள். அவர்களுடன் நானும் எனது கிராம உதவியாளரும் சென்றோம். மேல்பாதி கிராமத்தில் உள்ள பிடாரியம்மன்கோயில் அருகில், மூன்று கட்டைகளை முதல் எதிரி சுமன்ராஜ் அடையாளம் காட்டினார். அவைகளை போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள். அந்த மகசரில் நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 3 ஆகும்**. அந்த கட்டைகள் மூன்றும் ஏற்கனவே சா பொ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **இந்த கைப்பற்றுதல் தொடர்பாக முதல் எதிரி சுமன்ராஜின் ஒப்புதல்**

**வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 4 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. நான் பிப்ரவரி 2018 மாதம் மேல்பாதி கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பேற்றுக்கொண்டேன். ஜுலை 2020 வரை நான் மேல்பாதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். மேல்பாதி கிராம எல்லைக்குள் மேல்பாதி, கீழ்பாதி, மோரை எவரட்புரம், திருவள்ளுவர் நகர், கீழ்பாதியில் உள்ள பெரிய தெரு, இந்திரா நகர், அம்பேத்கர் நகர், சுல்தான்பேட்டை, அவுலியா நகர் ஆகிய பகுதிகள் உள்ளன. நான் மேலே குறிப்பிட்ட ஊர்கள் அனைத்தும் தனித்தனி ஊர்கள் என்றால் ஆமாம். குறிப்பாக மேல்பாதி ஊரும், அம்பேத்கர் நகர் என்ற ஊரும் தனித்தனியான பகுதி என்றால், அவ்வாறு கூற முடியாது. மேல்பாதி என்ற ஊரில் அமைந்துள்ள பகுதி தான் அம்பேத்கர் நகர். அம்பேத்கர் நகர் தனி ஏரியா கிடையாது. அம்பேத்கர் நகர் என்ற பகுதி அருங்குணம் செல்லும் வழியில் மெயின்ரோடிற்கு வடக்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கத்தில் உள்ள அம்பேத்கர் நகரிலிருந்து 500 மீட்டர் தள்ளி மேல்பாதி அ மைந்துள்ளது என்றால் சரிதான். மேல்பாதி பகுதி அம்பேத்கர் நகரிலிருந்து தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

4. போலிசார் போன் செய்தபோது நான் எங்கிருந்தேன் என்றால், நான் வீட்டிலிருந்தேன். அப்போது நேரம் மூன்று அல்லது மூன்றேகால் மணியிருக்கும். என் வீடு எங்கு அமைந்திருந்தது என்றால் மேல்பட்டாம்பாக்கம் கிராமத்தில் அமைந்திருந்தது. போன் செய்தவுடன், நான் கால்மணி நேரத்தில் நெல்லிக்குப்பம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றுவிட்டேன். எனது உதவியாளர் முஜிபுர்ரஹ்மான் நேராக பேருந்து நிறுத்தத்திற்கு வந்துவிட்டாரா அல்லது எனக்கு பின்னால் வந்தாரா என்றால், அவர் எனக்காக நெல்லிக்குப்பத்தில் காத்திருந்தார். பிறகு நானும், அவரும் நெல்லிக்குப்பம் பேருந்து நிறுத்தம் ஒன்றாக சென்றோம். அவர் நின்றிருந்த இடத்திற்கு எப்படி வந்தார் என தெரியுமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் நெல்லிக்குப்பத்தை சேர்ந்தவர். நான் எங்கிருந்து முஜிபுர்ரஹ்மானை அழைத்து சென்றேன் என்றால், பேருந்து

நிறுத்தத்திற்கு முன்பிருந்த பஸ் ஸ்டாப்பிலிருந்து அவரை அழைத்துக்கொண்டு பேருந்து நிறுத்தம் சென்றேன். பேருந்து நிலையத்தை தவிர நெல்லிக்குப்பத்தில் மூன்று பேருந்து நிறுத்தங்கள் உள்ளது என்றால் சரிதான். நான்ஆலை ரோடு பஸ் ஸ்டாப்பிலிருந்து கிராம உதவியாளர் முஜிபுர்ரஹ்மானை அழைத்துக்கொண்டு பேருந்து நிலையத்திற்கு சென்றேன். போலிசார் எனக்கு போன் செய்தவுடன் நான் முஜிபுர்ரஹ்மானுக்கு போன் செய்து, அவரை என்னுடன் வருமாறு தகவல் தெரிவித்தேன்.

5. பேருந்து நிலையத்தில் உள்ளே சென்றவுடன் கிழக்கு பக்கமாக டாய்லெட் பக்கம் உள்ள ஒரு மரத்தடியில் போலிசார் விசாரித்தார்கள். அது டாய்லெட் கட்டிடமா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. போலிசாரின் பதவி நிலை எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். ஆய்வாளரும் சில போலிஸ் கான்ஸ்டபிள்களும் அங்கிருந்தார்கள். எத்தனை போலிஸ் கான்ஸ்டபிள்கள் என்று தற்போது நினைவில்லை. யார் அந்த ஸ்டேட்மெண்டை எழுதினார்கள் என்றால் போலிஸ் ஒருவர் எழுதினார். முதல் எதிரி அவர் கூறிய விவரங்களை கால் மணி நேர அளவில் தெரிவித்தார். கால்மணி நேர அளவில் அதனை எழுதிக்கொண்டார்கள். மொத்தம் அரைமணி நேரம் ஆனது. ஜீப்பின் மேல் வைத்து எழுதினார்களா என்றால் ஆமாம். எழுதி முடித்தவுடன் எதிரிக்கு படித்து காண்பித்தார்களா என்றால் ஆமாம் , படித்து காண்பித்தார்கள். எழுதிய பேப்பரில் யார் முதலில் கையெழுத்து போட்டது என்றால் நான் தான் கையெழுத்து போட்டேன். அதன்பிறகு முஜிபுர்ரஹ்மான் கையெழுத்து போட்டார். அதன்பிறகு யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எழுதி கையெழுத்து போட்டு முடிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால், சுமார் அரை மணி நேரம் ஆனது.

6. நான் மேல்பட்டாம்பாக்கத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் பேருந்து நிலையம் வந்தேன். ஆலை ரோடு பேருந்து நிறுத்ததிலிருந்து நானும் முஜிபுர்ரஹ்மானும் எனது வாகனத்தில் பேருந்து நிலையத்திற்கு சென்றோம் என்றால் ஆமாம். பேருந்து நிலையத்திலிருந்து எங்கு சென்றோம் என்றால், மேல்பாதி கிராமத்திற்கு சென்றோம். நான் மற்றும் கிராம உதவியாளர் இருவரும் எனது இருசக்கர வாகனத்தில் சென்றோம். போலிசாரும், முதல் எதிரியும் ஜீப்பில்

வந்தார்கள். பொருட்கள் எடுக்கப்பட்ட இடத்திற்கு யார் முன்னர் சென்றார்கள் என்றால், போலிசார் தான் முதலில் சென்றார்கள். அந்த இடம் எனக்கு தெரியுமென்பதால், நான் போலிசாரை பின்தொடர்ந்து சென்றேன் என்றால் ஆமாம். அந்த இடத்தில் யாரை விசாரித்தார்கள் என்றால், முதல் எதிரியை தான் விசாரித்தார்கள்.

7. கோயிலுக்கு பக்கத்தில் கீழே மறைத்து வைத்திருந்த கட்டைகளை முதல் எதிரி எடுத்து கொடுத்தார். பிடாரியம்மன்கோயிலுக்கு எந்த பக்கத்தில் கட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றால், கோயிலுக்கு முன்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. பிடாரியம்மன்கோயில் கிழக்கு பக்கம் பார்த்த கோயில் என்றால் சரிதான். பிடாரியம்மன்கோயிலுக்கு முன்பக்கத்தில் கிழக்கு பக்கமாக முப்பது அடி தள்ளி மாரியம்மன்கோயில் உள்ளது என்றால் ஆமாம். பிடாரியம்மன்கோயில் முன்வாசலில் கான்கிரீட் ரோடு உள்ளது என்றால் சரிதான். பிடாரியம்மன்கோயில் முன்னர் காங்கிரீட் ரோடில் தடிகள் இருந்தன என்றால் இல்லை. நான் கூறியது போன்று முதல் எதிரி எந்த தடியும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிடாரியம்மன்கோயில் அருகே நடைபெற்ற நிகழ்வுகள் எவ்வளவுநேரம் நடைபெற்றது என்றால் சுமார் அரைமணி நேரம் ஆனது. எந்த தடியால் தான் அடித்தேன் என்று குறிப்பிட்டு முதல் எதிரி எந்த தடியையும் குறிப்பாக காட்டி, எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள சா பொ 1 வரிசையில் கண்டுள்ள தடிகள் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட தடிகள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த தடிகளைத்தான் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மூன்று தடிகளும் சவுக்கு தடிகள் அல்ல என்றும், அவை மூன்றும் யூகலிப்டஸ் மர தடிகள் என்றால், சரியல்ல. இந்த தடிகளைத்தான் அன்றைய தினம் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். நான் பார்க்கும்போது கைப்பற்றப்பட்ட தடிகளில் ரத்தக்கறை இருந்ததா என்றால் இல்லை. பிடாரியம்மன்கோயிலில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு கையெழுத்து தான் போட்டேன். அங்கு போலிசார் எழுதியஆவணத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை, ஆய்வாளர் எழுதிய ஆவணத்தில் கையெழுத்து போட்டேன். ஆய்வாளர் கைப்பட எழுதிய

ஆவணத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள வாசகங்கள் ஆய்வாளரால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல, ஆய்வாளர் தான் எழுதினார்.

8. பிடாரியம்மன்கோயில் நடவடிக்கை முடிந்த பின்பு , கையெழுத்து போட்டுவிட்டு, முஜிபுர்ரஹ்மானை அழைத்துக்கொண்டு, பஸ் ஸ்டாப்பில் விட்டு விட்டு நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு காவல்நிலையம் சென்று இந்த வழக்கு தொடர்பாக ஏதேனும் கையெழுத்து போட்டேனா என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் முதல் எதிரி தொடர்பான ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்படவில்லை என்றும், கணிணியில் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கிராம உதவியாளருடன் சென்று, காவல்நிலையத்தில் முதல்எதிரி தொடர்பான ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றும், என் முன்னிலையில், முதல்எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலத்தையும் வழங்கவில்லையென்றும், அவ்வாறே என் முன்னிலையில் முதல் எதிரி எவ்வித தடிகளையும் எடுத்து ஆஜர் செய்யவில்லையென்றும், என் முன்னிலையில் போலிசார் எந்த மகசரையும் தயார் செய்யவில்லையென்றும், நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபரின் மனைவி, நான் பணியாற்றியபோது விதவை சான்று கோரி ஏதேனும் மனு அளித்தாரா என்றால், அளித்துள்ளார். இறந்துபோன நபரின் மனைவி மற்றொரு திருமணம் செய்துகொண்டு வேறொரு நபருடன் தற்போது வாழ்ந்து வருகிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இவ்வழக்கு தொடர்பாக நான் நடவடிக்கை முடிந்து நான் வீட்டிற்கு சென்றபிறகு எப்போது என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் அதன்பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்குவிசாரணை

9. ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் கூறினார். அந்த விவரம் பதிவு செய்யப்பட்டது.

<u>அரசு தரப்பில் மறுவிசாரணை</u>

10. நெல்லிக்குப்பம் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்லும் வகையில் செயல்பாட்டில் உள்ளதா என்றால், அந்த பேருந்து நிலையம் அச்சமயத்தில் செயல்பாட்டில் இல்லை. பேருந்துகள் எதுவும் அச்சமயம் வந்ததில்லை. நான் எத்தனை வழக்குகளில் இவ்வாறு ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக செயல்பட்டுள்ளேன் என்றால், இதுதான் முதல் வழக்கு.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**

**CUDDALORE**

**Sessions** } **Case No. 44 of 2020**

Deposition of ....... witness for .................. { Prosecution........**P.W.12**
Defence
Court

| | |
|---|---|
| Name | பிரசன்னபிரியன் |
| Father's name | முனியன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 5th day of September 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 5th day of September 2023.**

SIGNATURE OF THE JUDGE.

1முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் நெல்லிக்குப்பம் மேல்பாதி, அம்பேத்கர் நகரில் குடியிருந்து, தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2020 ஆம் ஆண்டு ஆங்கிலபுத்தாண்டுக்காக

சென்னையிலிருந்து என் சொந்த ஊருக்கு பஸ்ஸில் வந்தேன். இரவு 07.00 மணிக்கு வீட்டுக்கு வந்தபோது, என் அம்மா ஊரில் ஏற்கனவே சண்டை இருக்கிறது, நீ ஏன் வந்தாய் என்று என்னை கேட்டார். நான் இரவு வீட்டிலேயே இருந்துவிட்டேன். மறுநாள் காலை 07.30 மணி அளவில், வேலு என்பவரை வெட்டிவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டேன். ஊரில் இத்தகைய சம்பவம் நடந்துவிட்டதால், அங்கிருக்கவேண்டாம், மீண்டும் சென்னைக்கே சென்றுவிடலாம் என்று முடிவு செய்து நான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். அப்போது என் அண்ணன் மேல்பாதி வழியாக செல்லவேண்டாம், குச்சிபாளையம் பஸ் ஏற்றி விடுகிறேன் என்று கூறி, என்னை பைக்கில் அழைத்து சென்றார். என் அண்ணன் பெயர் வினோத்குமார். நான் பஸ் ஸ்டாப்பில் அழுதுக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த போலிசார், ஏன் அழுகிறாய் என்று என்னை விசாரித்தார்கள். நான் அம்பேத்கர் நகரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக நினைத்து அழுவதாக தெரிவித்தேன். அப்போது போலிசாருடன் எதிரி கவியரசன் இருந்தார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் இரண்டாவதாக பச்சை சட்டை அணிந்து நிற்கிறார். சம்பவத்தை பற்றி தெரியுமா என்று என்னிடம் கேட்டு, என்னையும் என் அண்ணன் வினோத்குமாரையும் சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். குச்சிபாளையம் பஸ் ஸ்டாப்பில் இருந்த கவியரசன் போலிசாரை பார்த்தவுடன் அங்கிருந்து ஓட முயற்சி செய்தார். போலிசார் அந்த தம்பி கவியரசனை பிடித்து விசாரித்தார்கள். போலிசார் அந்த தம்பியை அடிக்கவில்லை. அவராகவே போலிசாரிடம், அந்த தம்பி கவியரசனும் மற்றவர்களும் அடித்ததாகவும், அந்த கத்திகளை தான் காண்பிப்பதாகவும், போலிசாரிடம் கவியரசன் கூறினார். நான் மற்றும் வினோத்குமார் சாட்சி கையொப்பம் போட்டோம்.

( சாட்சி கூறிய விவரங்களில் "கவியரசனும் மற்றவர்களும் அடித்ததாக" என்ற வாசகம் இந்திய சாட்சிய சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல என எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார். ஆட்சேபணைக்குட்பட்டு, சாட்சியம் பதிவு செய்யப்பட்டது).

2. **எதிரி கவியரசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாம் கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் அதசாஆ 5 ஆகும்**. அதன்பிறகு மேல்பாதி ரோடின் மேல் உள்ள எல்லைபிடாரியம்மன் கோயிலுக்கு பக்கத்தில் உள்ள மோட்டார் ஷெட் பக்கத்தில் உள்ள முள் புதரில் இருந்து இரண்டு கத்திகளை எதிரி கவியரசன் போலிசாரிடம் எடுத்து காண்பித்தார். அந்த இரண்டு கத்திகளும் தற்போது நீதிமன்றத்தில் உள்ளன. அவைகளில் இரும்பு பட்டை கத்தி ஏற்கனவே சா பொ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **இரும்பு கைப்பிடியுடன் உள்ள மற்றொரு கத்தி சா பொ 4 ஆகும்**., அந்த இடத்தில் போலிசார் எழுதிய ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 6 ஆகு**ம். அதில் இரண்டாவது கையொப்பம் என்னுடையது. போலிசார் என்னிடம் டைப் செய்யப்பட்ட ஆவணம் ஒன்றிலும், கையால் எழுதப்பட்ட ஆவணம் ஒன்றிலும் என இரண்டு ஆவணங்களில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். இவ்விவரம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

3. ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் கூறினார்., அந்த விவரம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்குவிசாரணை

4. சம்பவம் நடந்த அன்று நான் ஊரில் இல்லை என்றால் சரியல்ல, அன்று தான் நான் ஊருக்கு வந்தேன். இரவு 07.30 மணிக்கு நான் ஊருக்கு வந்தேன். சம்பவம் பற்றி மறுநாள் காலையில் தெரிந்துகொண்டேன். எதிரிகள் என் வயதை ஒத்தவர்கள் என்றால் இல்லை, என்னை விட வயதில் சிறியவர்கள். சம்பவம் நடைபெற்றதால் ஊரில் இருக்கவேண்டாம், என்று யார் கூறினார்கள் என்றால், என் அம்மா கூறினார். அதனால் தான் ஊரில் இருக்கவேண்டாம் என்று வெளியூர் சென்றுவிடலாம் என்று பஸ் ஸ்டாண்ட் சென்றேனா என்றால் ஆமாம். என்னை போன்றே எதிரி கவியரசனும் பயந்துகொண்டு பேருந்து நிறுத்தத்திற்கு அன்றைய தினம் வந்திருக்கலாம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலிசார் அந்த இடத்திற்கு வந்ததை பார்த்து நான் பயப்படாமல் தைரியமாக இருந்தேன் என்றால், ஆமாம். கவியரசன் பயந்து நழுவ

பார்த்தார் என்றால் ஆமாம், எஸ்கேப் ஆக பார்த்தார். நான் பேருந்து நிறுத்தத்தில் அழுதுகொண்டு இருந்ததால், என்னை விட்டுவிட்டார்கள் என்றும், அங்கிருந்து நழுவியதால் கவியரசனை பிடித்து இந்த வழக்கில் சேர்த்துவிட்டார்கள் என்றால், நான் அழுதுக்கொண்டிருந்தபோது என்னை போலிசார் ஏன் என்று கேட்டார்கள். கவியரசன் அங்கிருந்து நழுவியதால் அவரை பிடித்து விசாரித்தார்கள். கவியரசனை போலிசார் பிடித்து நீதான் அடித்தாய் என்று கேட்டார்களா என்றால், இல்லை, போலிசார் அவரை பிடித்து விசாரித்தார்கள். அப்போது கவியரசன், தான் அடித்துவிட்டதாக கூறினார். எதிரி கவியரசன் அடித்துவிட்டதாக போலிசாரிடம் கூறியதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கவியரசன் போலிசாரை அழைத்து சென்று கத்திகளை எடுத்து ஆஜர் செய்யவில்லையென்றும், அவை போலிசாரால் ஜோடனை செய்யப்பட்டவை என்றும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருவாள் கத்தி என்றால், எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அருவாள் கத்தியில் பல் பல்லாக இருக்கும் என்றால் சரிதான், கதிர் அறுக்கும் அருவாளில் அப்படித்தான் இருக்கும். அதனை நாங்கள் கருக்கு அருவாள் என்று குறிப்பிடுவோம். நீதிமன்றத்தில் உள்ள கத்திகளில் பல் பல்லாக காணப்படவில்லை என்றால் சரிதான். அருவாள் கத்தி இரண்டை எடுத்துக்கொடுத்ததாக போலிசாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த அருவாள் கத்தி நீதிமன்றத்தில் உள்ள ஆயுதங்கள் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*